# வெருகல் வேலாயுதர் ஆலயம் உடைக்கப்பட்டு விக்கிரகங்களும் பல பொருட்களும் கொள்ளை!

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 27-12-85 வெள்ளி (மார்கழி 12 ரபியு ஆகிர் 14) முழக்கம் 322

(திருமலை)

கிழக்கிலங்கையின் சரித்திரப் பிரசித்திபெற்ற தேவாலயமான வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயம் காடையர்களால் உடைக்கப்பட்டு, அங்கிருந்த பல பெறுமதிவாய்ந்த விக்கிரகங்கள் கொள்ளையடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் ஒரு வாரத்துக்கு முன்னர் இச்சம்பவம் இடம்பெற்றிருக்கலாமென நேற்றுக்கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. திருமலை மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்ற அசம்பாவிதங்கள், வன்செயல்களையடுத்து வெருகல் பகுதி தமிழ் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியதால் கடந்த மூன்று வாரங்களாக இவ் ஆலயம் பூசை எதுவுமின்றிப் பூட்டப்பட்டிருந்தது. நேற்றுமுன்தினம் இங்கு சிலர் சென்றபோது ஆலயம் உடைக்கப்பட்டு விக்கிரங்கள், வழிபாட்டு உருவங்கள் உட்படப் பல பெறுமதிவாய்ந்த பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. பல லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளை போயிருக்கலாமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## ராஜீவின் பேச்சு விபரம் இலங்கை கேட்டுள்ளது

இலங்கையிலுள்ள இந்தியத் தமிழரை ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லையென்று பாரதப் பிரதமர் பி. ரி. ஐக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தது தொடர்பான பூரண அறிக்கையை இலங்கை அரசாங்கம் புதுடில்லியிலுள்ள தமது தூதராலயத்திடம் கேட்டுள்ளது.

குறிப்பிட்ட பேட்டியில் இலங்கைப் பிரச்சினை, வம்சாவழியினரை இந்தியாவுக்கு ஏற்றுக் கொள்வது தொடர்பாக ராஜீவ் காந்தி தெரிவித்த விடயங்கள் தொடர்பான பூரண விபரங்களை உடன் அறிவிக்குமாறு தூதுவர் பேர்னுட் திலகரத்தின பணிக்கப்பட்டுள்ளார்.

இவ் அறிக்கை கிடைத்த பின்னரே இலங்கை அரசு தனது கருத்தை வெளியிடுமென அரசாங்கத்தின் உயர் மட்டத்தைச் சேர்ந்த ஒருவர் வெளிநாட்டு பத்திரிகையாளர் ஒருவர் தொடர்பு கொண்டு கேட்ட போது தெரிவித்தார்.

# பழிவாங்கும் போக்கைவிட்டு ராஜீவின் முறையில் அணுகுக!

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இலங்கையிடம் அமைச்சர் இராமச்சந்திரன் வேண்டுகோள்

(சென்னை)

இனவாதம், தீவிரவாதம், மொழி வெறி ஆகியவற்றிற்கு அப்பாற்பட்ட முறையில், ராஜீவ் காந்தி பஞ்சாப், அஸாம் பிரச்சினைகளைத் தீர்த்த அணுகு முறை மூலம் இலங்கை அரசு இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முற்பட வேண்டும் என்று தமிழக மின்துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று இடம்பெற்ற 'பாரதமும் இலங்கையின் தமிழர்களும்' என்ற நூல் வெளியீட்டு விழாவில் அமைச்சர் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், "பழிவாங்கும் போக்கை கைவிட்டு நவீன விஞ்ஞான கண்ணோட்டத்தை இலங்கை இவ்விடயத்தில் பின்பற்ற வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார்.

மனிதாபிமானத்தையும், விஞ்ஞான தொழில் நுட்ப அறிவையும் வழிகாட்டி நெறிகளாகக் கொண்டு அனைத்துப்

... 6ம் பக்கம் பார்க்க

### மட்டுநகரில் நேற்றுக் காலை

## இருவருக்கு மரண தண்டனை இருவர் சுடப்பட்டு மரணம்

(மட்டுநகர்)

காட்டிக் கொடுத்தவர்கள் என்ற குற்றச்சாட்டில் மட்டக்களப்பில் நேற்றுக் காலை இருவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

மட்டுநகர் புகையிரத நிலைய சந்தியில் இவ்விருவரின் சடலமும் கிடக்கக் காணப்பட்டது. இவர்கள் இருவரும் ஷெல்டன், அன்ரன் என அடையாளம் காணப்பட்டனர்.

இவ்விரு சடலங்களையும் பார்வையிட ஸ்தலத்துக்குச் சென்ற சீருடையினர் சுட்டதில் இரண்டு தமிழர்கள் அந்த இடத்திலேயே மரணமானார்கள். இவர்கள் கடையொன்றில் பணிபுரிபவர்களாவர்.

## ராஜீவ் காந்தியின் முடிவை ஈரோஸும் பாராட்டுகிறது

(சென்னை)

"மலையகத் தமிழர்களின் பிரச்சினை இத்தீவிலுள்ள தமிழர்களின் பிரச்சனையுடன் பின்னிப்பிணைந்த ஒன்று என்பதை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் நிலை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது."

இவ்வாறு ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்), 'இலங்கையில் சுமுகநிலை ஏற்பட்டு தமிழகத்திலுள்ள ஈழ அகதிகள் தாயகம் திரும்பினால்தான் இலங்கையிலுள்ள மலையகத் தமிழர்களை இந்தியா ஏற்றுக்

—6–ஆம் பக்கம் பார்க்க

### கூட்டணி கண்டனம்:

## ஜெயவர்த்தனவின் திடீர் முடிவு விஷமத்தனமானது!

(சென்னை)

"இந்திய வம்சாவழித் தமிழர்களை விமானங்களில் இந்தியாவுக்கு அனுப்ப ஜனாதிபதி ஜெயவர்த்தன திடீரென எடுத்த முடிவு விஷமத்தனமானது" என்று தமிழர் விடுதலைக் கூட்டணி நேற்று சென்னையில் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

இலங்கையில் அமைதி நிலை திரும்பும் வரையில் இலங்கை மலையகத் தமிழர்களை இந்தியா ஏற்றுக் கொள்ளாது என்னும் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி

...6ஆம் பக்கம் பார்க்க

## லொறி எரிப்பில் தப்பியவர் ஆஸ்பத்திரியிலிருந்து கடத்தல்

### மற்றைய ஐவரும் உயிருடன் எரிக்கப்பட்டனராம்

(திருமலை)

திருமலையில் இரண்டு தினங்களுக்கு முன்னர் லொறியொன்று எரிக்கப்பட்ட சம்பவத்தில், அடிகாயங்களுடன் தப்பியவரான ஏ. எம். ஹனிபா என்பவர், இங்குள்ள மருத்துவமனையொன்றில் நேற்றுக் காலை அனுமதிக்கப்பட்ட சில மணி நேரத்தின் பின்னர் கடத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காடையர் கூட்டமொன்றினால் எரிக்கப்பட்ட உப்பு லொறியில் பயணம் செய்த அறுவரில் இவரும் ஒருவராவர்.

லொறியில் பயணம் செய்த மற்றைய ஐவரும் காடையர்களால் எரிக்கப்பட்டுவிட்டதாகவும். தாம் முஸ்லிம் என்ப

...6ஆம் பக்கம் பார்க்க

## வங்கி மறியல் இன்று இல்லை

அடகு வைத்தோர் சங்கத்தினால் இன்று முதல் மேற்கொள்ளப்படவிருந்த மறியல்

—6ஆம் பக்கம் பார்க்க

### ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு:

## ஆசிரிய இடமாற்றத்தை பின்போடுவது அநீதியானது

(கொழும்பு)

ஜனவரி மாதம நடைபெறவிருந்த வருடாந்த ஆசிரிய இடமாற்றத்தை மே மாதம் வரை ஒத்திவைத்தமையை இலங்கை ஆசிரிய சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

பல வருடங்களாக வெளி மாவட்டங்களிலும், கஷ்டப் பிரதேசங்களிலும் கடமையாற்றிய பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் ஜனவரியில் தமக்கு இடமாற்றம் கிடைக்

—6–ஆம் பக்கம் பார்க்க

## ஐந்து தமிழர் கடத்தல்

(சென்னை)

திருகோணமலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு

—6–ஆம் பக்கம் பார்க்க

தமிழ் மக்கள் விரும்பிப் படிக்கும் பத்திரிகை ஈழமுரசு

## கடன்படிவம் விநியோகம்

(சாவகச்சேரி)

பத்துஇலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 1986 ஆம் ஆண்டிற்கான கடன் கொடுப்பனவு விண்ணப்பப் படிவங்களை, சாவகச்சேரி நகர சபை இப்பொழுது வழங்கிக் கொண்டிருக்கிறது.

இம் மாதம் 31ஆம் திகதியுடன் இக் கடன் விண்ணப்பப் படிவங்களின் விநியோகம் பூர்த்தியாகும் என்று நகர சபைச் செயலாளர் திரு. ரீ. நடராத்தினராஜா தெரிவித்தார்.

வீடுகள் திருத்துவோர் கிணறு வெட்டுவோர், மலசல கூடம் அமைப்போர் மின்சாரம் பெறுவோர் முதலானோர் இக் கடனைப் பெறலாம்.

## 'சேவையால் உயர்ந்தவர்'

(நீர்வேலி)

"பலாமரம் பூக்காது காய்ப்பது போல் பிரசாரம் செய்யாது பல நற்பணிகள் புரிந்தார். கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் பழைய மாணவனான இவர் பின்பு ஆசிரியராகவும், அதிபராகவும் தொடர்ந்து பத்து ஆண்டுகள் சிறப்பாகப் பணி புரிந்த காலத்தில் பாடசாலை உயர்வு பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது".

இவ்வாறு ஆசிரியராகவும், கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி என்பவற்றின் முன்னாள் அதிபராகவும், நுவரெலியா மாவட்ட கல்விப் பணிப்பாளராகவும் இருந்து, இளைப்பாறியபின் நைஜீரியாவில் காலமான திரு. சு. கே. சண்முகநாதனின் மறைவை ஒட்டி அவரது கோப்பாய் இல்லத்தில் நடாத்தப்பட்ட அஞ்சலிக் கூட்டத்தில் கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி அதிபரும், வடமாகாண அதிபர்கள் சங்க செயலாளருமான திரு. பூ. க. இராஜரட்ணம் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கோப்பாய் பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. க. கனகலிங்கம் தலைமையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. மற்றும் பலரும் பேசினர்.

## எழிலுரு சிற்பத்தேர்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு அரியநாயகன் புலம் ஸ்ரீ வீரசுத்தி விநாயகர் ஆலயத்திற்கெனப் பல இலட்சம் ரூபா செலவில் அழகிய சிற்பத்தேரொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இப்புதிய தேரின் வெள்ளோட்டம் எதிர்வரும் தை மாத இறுதியில் நிகழவிருக்கிறது. இதனையொட்டிச் சிறப்பு மலரொன்றும் வெளியிடப்படவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளைத் தேர்த்திருப்பணிச் சபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

விற்பனையாகிறது!

**ஆனந்தா திருக்குறட் கலண்டர்**

பல வண்ணப்பட அட்டையுடன் கூடியது, தினசரி பார்க்க வேண்டிய எல்லா விஷயங்களும் அடங்கப்பெற்ற மிக நேர்த்தியான தயாரிப்பு.

விற்பனையாளர்கள் தயவுசெய்து நேரில் தொடர்புகொள்க

**ஆனந்தா புத்தகசாலை**

226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22348. B 958

Technician Certificate Course in

**REFRIGERATION & AIR-CONDITIONING**

(6 months week-end course with theor y & practicals)

செய்முறைப் பயிற்சியுடனான இப்பயிற்சிநெறி ஆங்கிலத்திலும் தமிழிலும் கலந்து நடாத்தப்படும்.

LECTURER-IN-CHARGT: Associate Member of the Institute of Refrigeration — U. K.

விசேட தகமைபெற்ற குளிர்சாதனவியல் பொறியியலாளர்

**ஆரம்பம்: 4-1-1986**

**கட்டணம்: Rs. 850/- (Full Course Fees)**

தவணைமுறையிலும் கட்டணம் செலுத்தலாம்.

விபரங்களுக்கு:
DIRECTOR (Training Division)
REFRIGERATION ENGINEERING SERVICES
37/6, ஸ்ரான்லி வீதி
(மஸ்கன் கம்பனி அருகாமை)
யாழ்ப்பாணம்.

R/ 15224

## ஓராண்டு நினைவஞ்சலி

( திதி: 28-12-85 )



குப்பழுள்



குப்பிழான்

**கதிரவேல் சுத்தானந்தன் -கதிரவேல் சண்முகானந்தன்**

(சேகர்)

| | | | |
|---|---|---|---|
| பரமசிவன் படைப்பு: | 20 7-63 | ஆண்டவன் படைப்பு: | 1-4 54 |
| பாதகர் அழிப்பு: | 12-12-84 | ஆள்பவன் அழிப்பு: | 7-1-85 |

சுத்தானந்தா! தூயநற்புதல்வ! நற்றாய் நாட்டின் நலன் காக்க நினைத்தாய்
சேகர் என்றுன்னைச் செல்லமாய் அழைத்தனர் சீரிய இலட்சியம் செவ்விதாய் முடியுமுன்
பதவிக்காகப் பாதகர் சேர்ந்து தொண்டையை அறுத்துத் துடிக்கத்துடிக்க
கொன்றுபோட்டனரே கொலைகாரக் கும்பல் கொலையா இது? கோரக் கொலை;
அற்றைத் திங்கள் உன் அண்ணனை அரச படையினர் பட்டப் பகலில் சுட்டனர்
பாவிகள் இருவேறு பங்கு போட்டனர் நம்மிரு புதல்வ! நாமென் செய்வோம்
ஆண்டவன் இருக்கிறான் அவனே இயக்கிறான் நல்லதைக் கெட்டதை நடுநிலை செய்கிறான்.

(R15227) பெற்றோர், சகோதரர், உறவினர்,



## பிறந்தநாள் வாழ்த்து

✱ யாழ். மானிப்பாய் வீதி, முகம்மது கரீம் சுபைதா தம்பதியின் மகன் முகம்மது சபான் கரீம் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ கரவெட்டி கிழக்கு, சொக்கலிங்கம் இராஜேஸ்வரி தம்பதியின் மகள் பிரதீபா இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ திருநாவுக்கரசு வெள்ளையம்மா தம்பதியின் மகன் திலீபன் இன்று தனது நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ சாவகச்சேரி பெரியமாவடி, சிவபாதசுந்தரம் ஜெயராணி தம்பதியின் மகன் சியாமளன் இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ கோவில் வீதி, பஞ்சாட்சரம் கமலா தம்பதியின் மகள் மாலினி இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ நீர்வேலி, நாகரத்தினம் ரஞ்சிதமலர் தம்பதியின் மகள் நிரஞ்சனா இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ சித்தன்கேணி, நவரத்தினம் கமலா தம்பதியின் மகன் குகபரன் இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ புலோலி மேற்கு, முருகேசு சிவநேசம் தம்பதியின் மகன் பகீரதன் இன்று தனது பதின்மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ கல்வியங்காடு கட்டைப்பிராய், தனபாலசிங்கம் இந்திராணி தம்பதியின் மகன் சுஜீபன் இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ அரியாலை திருமகள் வீதி, சுந்தரலிங்கம் சற்குணதேவி தம்பதியின் மகள் சிந்துஜா இன்று தனது முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார்.

✱ நல்லூர், சிவானந்தம் தயாவதி தம்பதியின் மகன் நிஷாந்தன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## வரி விளம்பரம்

**திட்டப்பரிசு பெறுபவர்**

அங்கத்துவ நண்பர்களினால் தெரிவு செய்யப்பெற்ற இம் மாதத்திற்குரிய ஓராயிரம் ரூபாவையும் M. தம்பிராசா, கோப்பாய் தெற்கு பெறுகின்றார்கள். எவ்வித முதலீடுகளுமின்றி தினசரி வருமானம்/ மாதாந்த அதிஷ்டம்/ருதுவானாலும்/திருமணமானாலும் / பிரசவமானாலும் / விபத்தானாலும்/ மரணமானாலும் / ஏராளமான நன்கொடைகளும்/ கடன்வசதிகளும்/எல்லாம் ஒருங்கே அமைந்த திட்டமிது. எல்லா விடயங்களிலும் பிரதிநிதிகள் தேவை. தகுந்த சன்மானங்களுண்டு. விபரங்களுக்கு நேரில் வரவும் அல்லது முத்திரைகவருடன் விண்ணப்பிக்கவும், லக்கிபெனிபிட் கோ. லிமிட்டட் பொதுச் சந்தை, கோப்பாய். R/15223

**புதிய அதிபர்**

(ஆழியவளை)

பல மாதங்களாக ஆசிரியர் இன்றி மூடப்பட்டிருந்த போக்கறுப்பு அ. த. க. பாடசாலைக்கு அதிபர் ஒருவர் இடமாற்றம் பெற்று வந்துள்ளார். இப் பாடசாலைக்கு மூடுவிழா ஏற்படாமல் கல்விப் பகுதியினர் நடவடிக்கை எடுத்தமை குறிப்பிடத்தக்கது.

**பூசகர் தேவை**

இரண்டு காலப்பூசைக் கோவிலுக்குப் பூசகர் தேவை. இருப்பிடவசதியும் தகுந்த சம்பளமும் கொடுக்கப்படும். உடன் நேரில் தொடர்புகொள்ளவும். முகவரி: அறங்காவலர் வாலையம்மன் கோவில், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். R/15222

**பறிமுதல் உத்தரவு**

(வேலணை)

மீன் வியாபாரிகள், மற்றும் வியாபாரிகள் பழைய முறையிலான இருத்தல் படிகளை உபயோகித்துப் பொருட்களை விற்பனவு செய்தால் அப்படிகளை உடனடியாகப் பாவனையாளர் பாதுகாப்புச் சங்கங்கள் பறிமுதல் செய்து உதவி அரசாங்க அதிபர்களிடம் ஒப்படைக்கும்படி விலைக்கட்டுப்பாட்டு பரிசோதகர் திரு. கே. கே. மதிவதனன் உத்தரவிட்டுள்ளார்.

வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற பிரதேச பாவனையாளர் சங்க கூட்டமொன்றில் வைத்தே இவ்வுத்தரவுகளை அவர் பிறப்பித்துள்ளார்.

## மரண அறிவித்தல்

### திருமதி காங்கேசு நாகமுத்து

நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த திருமதி காங்கேசு நாகமுத்து காலமானார். இவர் முருகேசு காங்கேசு அவர்களின் அன்பு மனைவியாரும்; தவமணி, கனகாம்பிகை, முருகேசு (உள்ளூராட்சி உப அலுவலகம், நெடுந்தீவு), குமாரசாமி (இ. போ. ச. முல்லைத்தீவு), சுந்தரலிங்கம் (தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், கிளிநொச்சி) சாந்தலிங்கம் (தொழிற் திணைக்களம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தாயாரும், வே. குமாரசாமி [ஐயா] (வர்த்தகர், நெடுந்தீவு), பொ. இராமலிங்கம் (வர்த்தகர், கிளிநொச்சி), பராசக்தி, தங்கலட்சுமி, சுவந்திரகுசலகுமாரி ஆகியோரின் அன்புமாமியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 27-12-85 வெள்ளிக்கிழமை நெடுந்தீவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

R 15226

# எவருக்கும் அடிபணியாது வாழ உணவு நிறைவு தேவை

(யாழ்ப்பாணம்)

“நாம் எவருக்கும் அடிபணியாமல் வாழ வேண்டுமானால் உணவுற்பத்தியில் தன்னிறைவு காணவேண்டும். இந் நாட்டை அந்நியர்கள் ஆக்கிரமித்த போது உணவுத் தடை ஏற்பட்டது! அப்போது வன்னி நாடு கை கொடுத்தமையால் நாம் எவருக்கும் அடிபணியாது வாழ முடிந்தது.

இவ்வாறு தொழிலதிபர் சிவதர்மவள்ளல் க. கனகராசா ஊரெழுப் பயிர்ச்செய்கை உத்யோகத்தர் பிரிவில் நடைபெற்ற மரம் நாட்டு விழாவில் நிகழ்த்திய தொடக்கவுரையில் கூறினார்.

மேற்படி விழா ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலய பூஜை ஆராதனைகளுடன் ஊரெழுப் பயிர்ச் செய் உத்தியோகஸ்தர் திரு, சி. சக்திகிரீவன் தலைமையில் நடைபெற்றது.

திரு. க. கனகராசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது. “இன்று எமக்கு உணவுத் தடை ஏற்படக் கூடிய சூழ்நிலை உருவாகிவருகிறது இதிலிருந்து நாம் மீள வேண்டுமானால் செம்மண்ணுள்ள பிரதேசத்தில் வீடுகள், தொழிற்சாலைகள் கட்டப்படுவதை நிறுத்த வேண்டும் அனைத்துச் செம்மண் பிரதேசத்திலும் சிறந்த முறையில் பயிர்ச்செய்கை நடைபெறவேண்டும். இதற்கு வேண்டிய நீர் வளத்தைப் பெருக்குவதற்கு மழைநீர் கடலுக்குச் செல்வதைத் தடுத்து நிறுத்தி குளங்களும் ஆறுகளும் புதுப்பிக்கப்பட்டு அவற்றில் தேக்கப்படவேண்டும்” என்றார்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் தனது அருளுரையில், “சைவ தர்மம் நிலைக்கவேண்டுமானால் பயிர்ச்செய்கை செழிக்க வேண்டும் என்றார்.”

கமநலச் சேவை உதவி ஆணையாளர் திரு. க. பரமலிங்கம் பேசுகையில் “அனைத்து மக்களையும் விவசாயிகளாக மாற்று நோக்குடன் நடாத்தப்படும் இதுபோன்ற மரம்நாட்டு விழாக்கள் அனைத்துப் பயிர்ச் செய் உத்தியோகஸ்தர்கள் பிரிவிலும் நடாத்தப்படவேண்டும்” என்றார்.

மேலதிக அரசாங்க அதிபர் திரு. கா. இராமநாதர் பேசுகையில் “ மரங்கள் உணவுக்குப் பயன்படுவதோடு நின்றுவிடாது தெய்வீக சிந்தையை மக்கள் மனதில் ஏற்படுத்தி ஆத்மீக பலத்தை நாட்டில் மிளிரச் செய்யவும் உதவுகிறதென்றார்.

இவ்விழாவில் திரு. நா. குழந்தைவேலு, திரு. சி. கணேசு, திரு. த. கிருஷ்ணராசா, திரு. சு சபாரத்தினம், திரு வை க. கணேஸ்வரன், திரு சி. பாலசுப்பிரமணியம், ஆகியோரும் உரையாற்றினர்.

பயன்தருமரங்களையும், வீட்டுத் தோட்ட விதைகளையும் தொழிலதிபர் திரு கனகராஜா இலவசமாக வழங்கினர்.

## ‘கொடுத்தல்’ சிறு கதைத் தொகுதி

# ஆற்றொழுக்கான தமிழ் நடை யதார்த்தரீதி கையாள்கை

(கரவெட்டி)

“கொடுத்தல் என்ற சிறு கதைத் தொகுதியின் ஆசிரியர் திரு. சுதாராஜ் சக தொழிலாளர்களின் துன்பங்களைப் பொறுக்காத மென்மையான உள்ளம் கொண்டவர். அன்பினல் அனைவரது ஒத்துழைப்பையும் பெற்றவர். இவரது சிறுகதைகள் மனித சமுதாயத்தின் கீழ் பிடித்த பகுதிகளைத் தொட்டுக்காட்டுகின்றவை யதார்த்த ரீதியில் ஆற்றொழுக்கான இனிய தமிழ் நடையில் இலகுவான உவமைகளுடன் சொல்ல வந்த விடயத்தைப் பட்டென்று தெரிவிக்கும் ஆற்றல் இவருக்கு உண்டு. சிறந்த முறையில் சிரித்திரன் வெளியீடாக வெளிவந்துள்ள இந்நூல் கிராமிய மட்டங்களில் சென்று எல்லா வாசகர்களையும் கவரவேண்டும்.”

இவ்வாறு எழுத்தாளர் திரு நெல்லை க. பேரன் திக்கம் மத்திய நூலகமண்டபத்தில் நடைபெற்ற சுதாராஜின் ‘கொடுத்தல்’ சிறுகதைத் தொகுதி விமர்சன அரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

முன்னாள் விலைக்கட்டுப்பாட்டு ஆணையாளரும் சமாதான நீதிபதியுமான திரு. க. வல்லிபுரம் இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

ஆசிரியர் திரு க. தெய்வேந்திரன அறிமுகவுரை நிகழ்த்தினர். கூட்ட அமைப்பாளர் திக்கவயல் திரு. சி. தர்மகுலசிங்கத்திடம் இருந்து நூலின் முதற்பிரதியை கிராமோதய சபைத் தலைவர் திரு க. தங்கராஜா பெற்றுக்கொண்டார்.

திரு. செ. யோகராசா (கருணை யோகன்) பேசுகையில், “இன்றைய சூழலில் எதிர்காலத்தில் தமிழர்கள் மத்தியில் எழுத்தாளர்கள் தோன்றுவார்களோ என்பது சந்தேகமாகவுள்ளது ‘சுதாராஜின்’ கதைகள் எம்மிடையேயுள்ள நல்ல குணங்களையும் தீய குணங்களையும் படம் பிடித்துக் காட்டுகின்றன. இதில் கதை சொல்லும் பாத்திரங்களை நம் அன்றாடம் தரிசிக்கிறோம்” என்றார்.

ஆசிரியர் திரு. க. சிதம்பரப்பிள்ளை பேசுகையில், “எஸ். பொ., டானியல் போன்றோர் ஒரே விடயத்தைத்தான் திரும்பத் திரும்ப எழுதுகிறார்கள். இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் நீண்ட நேரம் வாசிக்க வேண்டிய நாவல்களை எழுதுவது அவசியமானதுதானா?” என்று கேட்டார்.

சட்டத்தரணி திரு. எஸ். சிவனருட்சுந்தரம், திரு. சி. தர்மகுலசிங்கம் ஆகியோரும் சிறுகதை நூலை விமர்சித்துப் பேசினார்கள்.

# மாங்குளத்தில் பெருமளவில் ஆசிரியர்கள் பற்றாக்குறை

(ஒட்டுசுட்டான்)

மாங்குளம் வட்டாரப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை பெருமளவில் நிலவுகிறது. பல பாடசாலைகளில் ஆரம்பக்கல்விப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லாததனால் பாலர் வகுப்புகள் கவனிப்பாரற்று உள்ளன.

தகுந்த ஆரம்பக் கல்விப் போதனை இல்லாமையால் மாணக்கரின் கஷ்டநிலையைப் பெற்றோர் கவலையுடன் முறைப்பாடு செய்துள்ளனர். பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை எந்தெந்தப் பாடசாலைகளில் உள்ளன, எவ்வகை ஆசிரியர்கள் தேவைப்படுகின்றன என்பதையிட்டு நீண்ட அறிக்கை ஒன்றினை மாங்குளம் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. மு. சிவானந்தம் கல்விப்பணிமனைக்கு அனுப்பியுள்ளார்.

## ‘தீப்பொறி’ தொடுக்கும் கேள்விக்கணை

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் என்றும் இல்லா நெருக்கடி ஏன் தலைவிரித்தாடுகிறது?

(யாழ்ப்பாணம்)

“உங்கள் அனைவர் முன்னும் உடனடியாகத் தீர்வுகாணப் படவேண்டிய சில அவசரப் பிரச்சினைகளை முன்வைக்க வேண்டியது எமது கடமை எனக் கருதி சில கேள்விகளை எழுப்ப முனைகிறோம்” என்று “தீப்பொறி” வெளியீட்டினரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

இதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: “அண்மையில் முன்னெப்போதும் இல்லாத வகையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அராஜகம் தலைவிரித்தாடத் தொடங்கியுள்ளது. ஒவ்வொரு தமிழ்மகனும் இதனால் பாதிக்கப்படும் அச்சத்தால் வீட்டினுள் அடைபட்டுக் கிடக்கும் நிலைமை தோன்றியுள்ளது. இறுதியாக இன்று இயக்க அங்கத்தவர்களுக்கே, ஆயுதம் ஏந்திய போராளிகளுக்கே பாதுகாப்பில்லை என்ற நிலை.

தமிழ் மக்களின் விமோசனத்திற்காகப் போராடும் விடுதலைப் போராளிகள் மக்களின் சொத்துக்கள். இவர்களை அழிப்பதனால் இந்த இயக்கங்கள் எதனைச் சாதிக்கப்போகின்றன?

இந்த நிலைமை தொடருமானால் தமிழ்மக்களின் எதிர்காலம்? இந்த நிலைமை இன்று திடீரெனத் தோன்றியதா? இல்லை. விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பநாள் முதல் சிறிது சிறிதாகத் தோன்றி வளர்ந்து இன்று பூதாகரவடிவம் பெற்றுள்ளது. அப்படியானால் இவ்வளவு காலமும் இதனை அனுமதித்தது எப்படித் தோழர்களே? யாருக்கோ நடப்பதாக எண்ணிப் பேசாதிருந்தோம், எமக்குச் சாதகமாக இருந்தபோது நியாயப் படுத்தினோம். தேவைப்பட்டபோதெல்லாம் நாமே செய்து விட்டு மறுப்பறிக்கை விட்டோம், அல்லது நியாயப்படுத்தினோம். விளைவு, இந்த அராஜகத்தின் வளர்ச்சிக்குத் தவிர்க்க முடியாமல் நாமே பலியானோம்

இப்போது திடுக்கிட்டு விழித்தெழுந்து அராஜகம் பற்றிக் கோஷமெழுப்புகிறோம், அநீதியைக் கண்டிக்கிறோம். எம்மால் ஏமாற்றப்பட்ட மக்களை விழித்தெழுமாறு அறைகூவுகிறோம். துக்கதினம், ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு வற்புறுத்துகிறோம். கைக் குண்டுகளை வெடிக்க வைத்து கடைகளை மூடுவிக்கிறோம். துப்பாக்கி முனையில் பத்திரிகையாளரை மிரட்டி அறிவித்தல் விடுவிக்கிறோம்.

சிந்தித்துப் பாருங்கள் தோழர்களே எமக்கு அந்தளவிற்கு யோக்கியதை உண்டா?

ஒரு போராட்டத்தின் வெற்றிக்கு அப்போராட்டம் நடைபெறும் சூழ்நிலை ஆரோக்கியமாக இருக்க வேண்டியது அவசியமானது. எமது பொறுப்பற்ற அராஜக நடவடிக்கைகளால் அச் சூழ்நிலை மாசுபடுத்தி விட்டால் முழுப்போராட்டமும் தோல்வியை அடையும். இச் சந்தர்ப்பத்தைத் தவற விட்டால் தமிழ்ச் சமுதாயம் எத் தலைமுறையிலும் விடுதலை பெறமாட்டாது என உணர்ந்து கொள்வோம்.

## நூல் வெளியீட்டு விழாவில் ஆய்வுரை

# எழுத்துத்துறை மனிதனை சமூக வாழ்வில் இணைத்து சாதனை படைக்க உதவுகிறது

(புலோலி)

“ஈழத்து நாடக இசைத் துறை வளர்ச்சி பற்றிய கருத்துக்களையும் தமிழ் நாட்டிற்கும், இலங்கைக்குமுள்ள தொடர்புகளை பற்றியும் டாக்டர் கனக சுகுமார் பொன். பூலோகசிங்கம் ஆகியோரின் தேன் பொழுது நூல் எடுத்துக் கூறுகின்றது. மனிதன் மறைந்தாலும் அவனால் எழுதப்பட்ட எழுத்துக்கள், சிந்தனைகள் நிலைத்திருந்து சமுதாய மேம்பாட்டிற்கு உதவுகின்றன. இலக்கியம் மனித வாழ்க்கைக்கு மிக இன்றியமையாததாகும்.”

இவ்வாறு மந்திகை அரசினர் வைத்தியசாலை உதவி வைத்திய பயிற்சி நெறிப் பொறுப்பதிகாரி டாக்டர் கனக. சுகுமார், பொன். பூலோகசிங்கம் ஆகியோரின் “தேன் பொழுது” நூல் வெளியீட்டு விழாவிலே ஆய்வுரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் கலாநிதி என். சுப்பிரமணிய ஐயர் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை பார்வதவர்த்தினி கலா மண்டபத்தில் நடைபெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு டாக்டர் எம். கே. முருகானந்தன் தலைமை தாங்கினார் திக்கவயல் தர்மகுலசிங்கம் அறிமுக உரையை நிகழ்த்தினார். புகைப்படக் கலைஞரும், தொழிலதிபருமான திரு. அ. நாகரத்தினம் (குகன்) முதல் நூலைப் பெற்றுக் கொண்டார்.

கலாநிதி. சுப்பிரமணிய ஐயர் தொடர்ந்து ஆய்வுரையாற்றுகையில், மனிதர்கள் தம்மை சமூக வாழ்க்கையில் இணைத்துக் கொள்ள வேண்டும். எழுத்துத்துறை மனிதனைசமூக வாழ்க்கையுடன் இணைத்துச் சாதனைகளை நிலை நாட்டும். எதிர்காலத்தில் கலைஞர்கள் பற்றி ஆராய்வதற்கு இத்தேன் பொழுது நூல் உதவு நூலாக அமையும், இது ஒரு வரலாற்று நூலாகும். இந் நூலாசிரியர்களின் சமூக பங்களிப்பு மிக இன்றியமையாததாகும். இதன் மூலம் இவர்கள் ஒரு சமுதாயப் பணியை நிறைவேற்றியுள்ளார்கள்

கலைஞர்கள் தங்கள் கருத்துக்களை அடிமட்ட வாசகன் கூட விளங்கிக் கொள்ளத் தக்கதாக எழுத வேண்டும். ஆனால் கோட்பாடுகளை இலக்கியத்தில் வெளிப்படையாகக் காட்டக்கூடாது. சிரித்திரன் ஆசிரியர் திரு. சிவஞானசுந்தரம் இலைமறைகாயாகவிருந்து கலை இலக்கியப்பணியாற்றி வருவது பாராட்டப்படவேண்டியதாகும். சிரித்திரன் வெளியீடான இத்தேன்பொழுது போன்ற நூல்கள் மேலும் வெளிவந்து எமது சமுதாயத்திற்கு உதவவேண்டும். கலைஞர்களை பேட்டிகாணும் போது பேட்டி கண்ட திகதியும் குறிப்பிடப்பட வேண்டும்” என்றார்.

டாக்டர் முருகானந்தன் தலைமை உரையில் தமிழ் மக்கள் அரசியல் பொருளாதார, கலாச்சார, ரீதியாக அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு உரிமை மறுக்கப்பட்டதற்கு எதிராக இன்று ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் எமது மொழி, கலை, கலாச்சாரம், இலக்கியம், நிலம் ஆகிய பல்வேறு அம்சங்களிலும் சுதந்திரத்தை ஏற்படுத்துவதற்கான போராட்டமே தமிழ் மக்களின் இன்றைய தேசிய விடுதலைப் போராட்டமாகும். இப் போராட்டம் பல்வேறு அம்சங்களிலும் நடந்ததால் தான் எதிர்காலத்தில் செழுமையான முன்னேற்றமான சந்ததியை உருவாக்க முடியும். இல்லையேல் கலாச்சார வெறுமை கொண்ட வரட்சியான காட்டுமிராண்டித் தனமான ஒரு எதிர்காலச் சந்ததியை காண வேண்டி வரும்.

எமது இனத்தின் பழம் பெருமைபற்றி மாத்திரமன்றி அதன் கலை கலாச்சார, இலக்கிய வளர்ச்சிக்கு ஏதுவான ஆராய்ச்சிகள் செய்யப்படுவதும், படைப்புகள் வெளியிடப்பட்டு வருவதும் வரவேற்கப்பட வேண்டியதாகும். கலைகளிலும், இலக்கியத்திலும் விழிப்புணர்ச்சியும் வளர்ச்சியும் ஏற்பட்டுவரும் இக்காலகட்டத்தில் அக்கலைகளுக்கு உயிர் கொடுத்தும், அந்த இலக்கியங்களுக்கு உருக்கொடுத்தும் வரும் கலைஞர்கள் பற்றி மக்கள் நன்குஅறிந்து கொள்ள வேண்டும், பலதுறை சார்ந்த கலைஞர்களின் தொகுப்பான இத் “தேன்பொழுது” நூல் இக்காலகட்டத்தில் மிக முக்கியம் வாய்ந்த நூலாகும்.” என்றார்.

தென் புலோலியூர் பண்டிதர் வீ. பரந்தாமன் பெண் எழுத்தாளர் செல்வி சந்திரா தியாகராசா, திரு. து. குலசிங்கம் கருணையோகன், நூலாசிரியர்களான டாக்டர் கனகசுகுமார், பொன். பூலோகசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர். யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை நூலகப்பொறுப்பாளர். திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம் நன்றியுரை நிகழ்த்தினர்.

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் நடனமும், பருத்தித்துறை ஞான சம்பந்தர் கலை மன்றத்தினரின் மெல்லிசைகளும் “சட்டம் சிரிக்கிறது” என்ற சிறுவர்களின் நாடகமும் இடம் பெற்றன.

# வல்வை நகரசபை நடவடிக்கை

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை நகரசபைப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருவதையடுத்து அவற்றை நஞ்சூட்டிக் கொல்வதற்கு அண்மையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நகரசபை ஊழியர்கள் ‘நாய் ஒழிப்பு’ வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் சில வீட்டு வளர்ப்பு நாய்களையும் அவர்கள் பிடிக்கவேண்டி ஏற்பட்டதாம்.

இவ்வாறு பிடிக்கப்பட்ட நாயின் சொந்தக்காரர் ஒருவர் மதுபோதையில் நகரசபை அலுவலகத்திற்குச் சென்று அங்கிருந்த ஊழியர்களை எச்சரித்து மிரட்டினாராம். இவ்விடயம் இளைஞர்கள் சிலரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து குறிப்பிட்ட நபர் விசாரணை செய்யப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டதாகவும் அறியப்படுகின்றது

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

### உதய சிந்தனை

பிறப்பு, முதுமை, பிணி, சாவு என்பவற்றுக்கு ஓயாது அஞ்ச வாழ்வோரே, நீங்கள் உங்களது கொடுங்கோன் மன்னன் இருப் தில்லை என்ற நற்செய்தியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

கௌதம புத்தர்

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 23336

இதய ஒலி

27-12-85 வெள்ளிக்கிழமை ( குரோதன ) மார்கழி-12

# அடம் பிடிப்பது அவ்வளவு நல்லதல்ல

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இனப் பிரச்சினைத் தீர்வுக்குச் சமர்ப்பித்த மாற்று யோசனை சம்பந்தமாக உத்தியோக பூர்வமாக இலங்கை எதனையுமே அறிவிக்காது அசாதாரண மௌனம் சாதித்து வருகின்றது

ஜனாதிபதி ஜெயவர்த்தன, அமைச்சர் அத்துலத் முதலி, பிரதமர் பிரேமதாசா போன்ற முக்கியஸ்தர்கள் உள்ளூர் நிகழ்ச்சிகளிலும், முக்கிய பேட்டிகளிலும் இது சம்பந்தமான கருத்தைத் தெரிவித்துள்ளனர்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் வடக்கு, கிழக்கு இணைப்பு என்பது முடியாது என்பதே இவர்களின் பேச்சாக இருந்து வருகின்றது.

புதிதாக ஏதோ ஒன்றைத் தமிழர்கள் கேட்பது போலவும், அதற்கு அரசாங்கம் அனுமதி வழங்காது என்பது போலவும் இவர்களின் பேச்சுக்கள் அமைந்து வருகின்றன.

''வடக்கும், கிழக்கும் பிரிந்துபோய் இருக்கிறது; அதனை இணைத்துத் தாருங்கள்'' என்று தமிழர் கூட்டணி கேட்கவில்லை; தமிழ் மக்களும் அப்படிக் கேட்கவில்லை.

வடக்கும் கிழக்கும், ஒருமொழி பேசும் பிரதேசம். இவை இரண்டும் ஆண்டாண்டு காலமாக [illegible] ருந்து வருகின்றன.

தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்றால் வடக்கும், கிழக்கும் ஒன்றாகவேயிருக்கும். ''ஒருமொழி மாநில அமைப்பைத் தாருங்கள்'' என்று தான் தமிழர் கூட்டணி கேட்கின்றது.

இதன் அர்த்தம், ஒருமொழி மாநில அமைப்பை இரண்டாகப் பிரித்து வடக்கு, கிழக்கு என்று தந்தால் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதே தவிர, இரண்டையும் இணைத்துத் தாருங்கள் என்று புதுமையாக கேட்பது என்பதல்ல.

1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தல், தொகுதி அடிப்படையில் நடைபெற்றது.

1978 ஆம் ஆண்டில் புதிதாகக் கொண்டுவரப்பட்ட மாவட்ட விகிதாசார அடிப்படையில் கூட்டணியினர் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படவில்லை

1977 ஆம் ஆண்டுத் தேர்தலில், தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து, வடக்குக் கிழக்கு மாகாணங்களின் ஏகபோக பிரதிநிதிகளாக கூட்டணியினர் தெரிவாகினர்.

தமிழ்ப் பிரதேசங்களின் ஏழு மாவட்ட சபைகளில், ஆறு மாவட்ட சபைகளை இன்றைய அரசாங்கத்தின் புதிய விகிதாசார தேர்தல் திட்டத்தின் கீழும் தமிழர் கூட்டணியினரே கைப்பற்றினர் என்பதை ஆட்சியாளர்கள் மறந்துவிடக்கூடாது.

இந்த நிலையில் பார்க்கும்போது 1977 இல் தொகுதி அடிப்படையிலும், 1981 இல் விகிதாசார அடிப்படையிலும் தமிழ் மக்கள் தனிநாட்டுக் கோரிக்கையை ஏற்று, வாக்குப் பலத்தால் அங்கீகாரமும் வழங்கியுள்ளனர் என்பதையும் அரசாங்கத் தலைவர்கள் மனதில் கொள்ள வேண்டும்.

ஆனாலும், அரசியல் தீர்வொன்று காணப்பட வேண்டுமென்பதற்காகவும், இந்தியாவின் நல்லெண்ணத்துக்கு மதிப்பளிக்கும் வகையிலுமே ''தனிநாட்டுக் கோரிக்கையிலிருந்து'' இறங்கி, ஒருமொழி மாநில அமைப்பு இப்போது முன் வைக்கப்பட்டுள்ளதென்பதை இவ்வேளையில் நினைவுபடுத்துவது எமது கடமையாகும்

இராணுவத் தீர்வை மனதுள் வைத்துக் கொண்டு, அரசியல் தீர்வென்று பேசிவரும் ஆட்சியாளர்கள், எல்லாவற்றையும் நிராகரித்து வருவது புத்திசாலித்தனமானதல்ல.

கூட்டணியின் யோசனையை இலங்கை பரிசீலிக்க வேண்டுமென்று பல இடங்களிலிருந்தும் இப்போது குரல் கிளம்பத் தொடங்கியுள்ளது.

இந்தியாவிலுள்ள அரசியல் அமைப்புக்கள் மட்டுமன்றி, இலங்கையிலும் பல்வேறு குழுக்கள் இதனையே அறிவித்துள்ளன

இந்தவேளையில், இலங்கை அடம்பிடிப்பதும், அசாதாரண மௌனம் சாதிப்பதும் அவ்வளவு நல்லதாகத் தெரியவில்லை.

---

**உலகின் மிகச் சிறந்த உளவுவேலை நிறுவனங்கள் நான்கில் 'மொஸாட்'டும் ஒன்றாகும். ஆனால் இது ஆரம்பிக்கப்பட்டு முப்பது வருடங்கள் மட்டுமே ஆகின்றன.**

# மொஸாட் முக்கிய பணிகள்

# வேவுபார்த்தல்; உளவறிதல்

# எதிருளவு மறைமுகத் திட்டம்

இஸ்ரேலின் அந்தரங்க வேவு பார்த்தற் சேவையாகிய மொஸாட், தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் பணிகளாவன, வேவுபார்த்தல், உளவு அறிதல், எதிருளவு அறிதல், மறைமுக நடவடிக்கைகள் என்பனவாம். இஸ்ரேலின் முதன்முதற் பிரதம அமைச்சர், டேவிட் பென்-கூறியோனே தமது நாட்டின் பரவலாகப் பின்னிப் பிணைந்த வேவு பார்க்கும் அமைப்பிற்கு அடித்தளம் ஒழுங்கமைத்தார். ஐந்து பெரும் வேவுத் தகவல் ஈட்டும் கிளைகளை அவர் நிறுவலானார்.

பாலஸ்தீனத்தில் குடியமர்ந்துள்ள யூத மக்கள் இரகசியமாக இயங்கும் இராணுவமொன்றைத் தமக்கென அமைத்து 'ஹகனா' என அதற்குப் பெயர் இட்டனர். அதன் வேவுப் பிரிவு 'ஷாய்' எனப்பட்டது. மேற்படி ஐம்பெரும் கிளைகளில் 'ஷா'யும் ஒன்று. இஸ்ரேலின் ஜனனத்தின் (பிறப்பின்) பின்பு, நாட்டின் உத்தியோக பூர்வ பாதுகாப்புப் படையுடன் ஹகனாவும் சேர்த்துக் கொள்ளப் பெற்றது. ஆயினும் 'ஷாய்' பிரிவானது வேவுத் தரவுகளை ஈட்டி அவற்றைப் பகுப்பாய்வு செய்யும் தனது பணியைத் திறம்படத் தொடரும் வண்ணம், உருக்குலையாது அப்படியே இயங்கிவந்தது.

இவ்வைம் பெரும் கிளைகளில் இரண்டாவது, 'ஷின்பெத்' எனப்படும். உத்தியோக பூர்வமாக, இஸ்ரேலின் உள்ளூர்ப் பாதுகாப்பு இதற்கு வாய்ந்த கடமையாகும். மூன்றாவது கிளையாக அமைந்திருந்தது 'ஆலியா பெத்' ஆகும். பிரித்தானிய ஆட்சிப் பொறுப்புக் காலத்தில் பாலஸ்தீன தேசத்தினுள் 'சட்ட விரோதக்' குடிவருவோரின் இரகசியப் பிரவேசத்திற்கு உதவுதற்கென இது உருவாக்கப்பட்டது. இஸ்ரேல் சுதந்திர நாடாகிய பின்னர், பகை அரபு நாடுகளிலிருந்த யூதர்கள் இஸ்ரேலுக்குத் தப்பிச் செல்லத் துணை நிற்கும் பணியின்பால் 'ஆலியா பெத்' கவனம் செலுத்தலாயிற்று.

இனி, நான்காவது கிளையொன்றைத் தாபித்தற்கு இஸ்ரேலிய வெளிநாட்டு அமைச்சு பொறுப்பேற்றது. அதன் ஒரேயொரு நோக்கம், பிற நாடுகளிலுள்ள வேவு பார்த்தல் அதிகாரிகளோடு தொடர்பு இணைப்புகள் நிறுவிக்கொள்ளல் ஆகும். ஐந்தாவது கிளையின் பிரத்தியேக கடமை, பொலிஸ் வேவுத் தரவு விடயங்களைக் கையாள்வதாகும்

இஸ்ரேல் ஒரு தேசமாகப் பிரகடனமாகிய பின் சில ஆண்டுகளாக, இவ்வைந்து கிளைகளுமே இஸ்ரேலின் வேவு பார்த்தற் சமுதாயம் முழுமையுமாயின. இஸ்ரேலின் இம் முதற் காலப் பகுதியின் போது, இஸ்ரேலிய வாழ்க்கையின் ஏனைய பல அம்சங்கள் போல, இவ்வேவு பார்க்கும் சமூகமும் ஒரே குழப்ப நிலையினால் அல்லலுற்றது. பொறுப்புத் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டிருக்கவில்லை; தெட்டத் தெளிவான செயற்பாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டு இருக்கவுமில்லை. ஒவ்வொருவரும் தன்னால் இயன்ற மட்டும் சிறந்த வகையில், தமது உள்ளுணர்வின் பணிப்புகளுக்கு ஏற்ப, வழி நடந்து செயலாற்ற வேண்டியவர் ஆயினர். இவை போதாவென்றாற் போல, நடந்தேறும் கருமங்களை மேலும் சிக்கலாக்குதற்கு, இப்பல்வேறு கிளைகள் மத்தியிலும் குறித்த ஓரளவு போட்டாபோட்டியும் பொறாமையும் நிலவின.

1951 ஆம் ஆண்டு, ஒரு மீள ஒழுங்கமைப்பு நடைமுறையொன்று ஆரம்பமானது. முன்போலவே உருக்குலையாது, 'ஆலியா பெத்' பொலீஸ் வேவுத் தகவற் படை, ஆகியன, ஆதி முதல் தத்தமக்கு வாய்ந்த மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்பெல்லைகளுள் இயங்கி வந்தன. 'ஷின் பெத்' துமகூட, உள்ளூர்ப் பந்தோபஸ்தைக் கவனிக்கும் தன் பணி பேணி வந்தது.

ஏனைய பொறுப்புகள் அனைத்தும் இரு பெரும் ஒழுங்கமைப்புகளுக்கிடையில் பகிர்வு ஆயின. இந்த இரண்டினுள் ஒன்று, இராணுவ வேவு பார்த்தலின் ஒரு கிளையாக இருந்தது. சில வேளைகளில் இது 'அமான்' என வழங்கிற்று. பிரத்தியேகமாக இராணுவ அக்கறைகளுக்குரிய விடயங்களிலேயே இக்கிளை ஈடுபட வேண்டியிருந்தது. தரவுகள் திரட்டுதல் அவற்றில் முக்கியமானது மேலும், இந்தக் கிளையானது ஆயுதப் படைகளுடன் நெருங்கித் தொழிற்பட வேண்டியதாக இருந்தது. வேவு பார்க்கும் சமுதாயத்தின் ஐந்தாவது பாரிய கிளை மீது சுமத்தப் பெற்றிருந்த பொறுப்புகளானவை, ஏனைய எவற்றுக்காயினும் வாய்ந்தவற்றைவிட வரையறையில் 'நறுக்' கானவையல்ல; வகையில் பல்வேறுபட்டன; அத்துடன், செயல்வீச்செல்லையிலும் மிகப் பரந்துபட்டன. 'மொஸாட்' எனப் பெயர் பெற்றது இக்கிளையே ஆம். உண்மையில், இஸ்ரேலியரின் மொழியாகிய தொன்மை பொருந்திய 'ஹீப்ரூ' (எபிரேய) மொழியில் ஒரு நீண்ட பெயரிலுள்ள வார்த்தைகளின் சுருக்கமே தவிர, முழுப் பெயரல்ல வேவு பார்த்தற்கும் விசேட பொறுப்பளிப்புகளுக்குமான நிறுவனம் என்பது அதன் பொருள். அதன் முக்கிய முதற் பணி, இஸ்ரேலின் அக்கறைகளுக்குப் பாத்திரமாகக் கூடிய எந்தவொரு துறை தொடர்பாகவும் வெளிநாடுகளில் தகவல் திரட்டி அதனைப் பகுப்பாய்வு செய்தலாகும்.

இஸ்ரேலியப் பிரதமர்பென்-கூறியோன் வேவுபார்த்தல் அலுவல்களையிட்டு அதியுன்னதப் புரிந்துணர்வாற்றல் வாய்ந்தவர் என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பெற்றுள்ளது. மொஸாட் தனது பணிகளை நிறைவேற்றப் புகும் பொழுது, எண்ணற்ற கடின, ஆபத்தான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டிவரும் என்பதை அவர் ஏற்கெனவே நன்றாக நிதானித்திருந்தார். அக்காரணத்தை முன்னிட்டே அக்கிளையின் உத்தியோகபூர்வ தலைப் பெயரில் ('ஸ்பெஷல் அஸைன்மென்ற்ஸ்') விசேட பொறுப்பளிப்புகள் என்ற பதத்தையும் உள்ளடக்கியிருந்தார்.

இஸ்ரேலிய அரசாங்கத்தின் ஏனைய நிறுவனங்கள் எவற்றினதும் செயல் எல்லைக்கு அப்பாற்பட்ட அசாதாரண நடவடிக்கை ஏதாவது, அது இராணுவ நடவடிக்கையாக இருந்தாலென்ன ('சிவிலியன்') குடியியல் நடவடிக்கையாக இருந்தாலென்ன, எழும் இடத்து, அதனை நிறைவேற்றுமாறு பணிக்கப்படுவது ''மொஸாட்'' டாகவே இருக்கும். ''மொஸாட்'' நிறுவப்பெற்று முப்பது ஆண்டுகள் கழிந்து விட்டன. இன்று, அகில உலகமே மிகச்சிறந்த வேவுபார்த்தல் முகவர் நடுவங்கள் நான்கினுள் ஒன்று என ''மொஸாட்'' கணிக்கப் பெற்று நிற்கிறது. மற்றைய மூன்றினதும் ஆள் வலுவும் அதிகம்; நிதி வளமும் அதிகம். இதோ அவற்றின் பிரமிக்கத்தகு பட்டியல்: சோவியத் ரஷ்யாவின் 'கே. ஜீ. பீ.'; அமெரிக்க ஐக்கிய அரசுகளின் 'சி. ஐ. ஏ.'; பிரித்தானிய இராச்சியத்தின் 'டீ. 16.'

''வாஷிங்டன் போஸ்ற்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில், இலங்கையின்

...5 ம் பக்கம் பார்க்க

**Tamil Information ல் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தின் இறுதிப்பகுதி இது. முதல் இரு பகுதிகளும் 23, 24ம் திகதிகளில் வெளியாகின.**

★ பெண்கள் உட்பட 200 அரசியல் பிரமுகர் கைது

# பாக். எதிரணி மீது பொலிஸ் தடியடி, கண்ணீர்ப் புகை!

(லாகூர்)

பாகிஸ்தானில் இருபது பெண்கள் உட்பட இருநூறு எதிர்த் தரப்பு அரசியல் வாதிகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது. லாகூரிலும், ராவல் பிண்டியிலும் அரசுக்கு எதிராகப் பேரணி நடத்த முற்பட்டமையாலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஆர்ப்பாட்டம் நடத்த முற்பட்டோர் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்ததுடன் தடியடிப்பிரயோகம் செய்ததாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மேற்படிப் பேரணி ஏற்பாடுகளைப் பதினொரு எதிர்க்கட்சிகள் இணைந்த ஜனநாயக மீட்பு இயக்கத்தினர் செய்திருந்தனர்.

கடந்த எட்டரை வருடகால இராணுவ ஆட்சியை இவ்வருட இறுதிக்குள் நீக்கப்பேவதாக ஜனதிபதி ஜெனரல் ஷியாவுல்-ஹக் அறிவித்துள்துள்ளார்.

இதே அறிவிப்பைப் பகிஸ்தான் பிரதமமந்திரி ஜுனெஜோவும் விடுத்துள்ளார். ஆனல் எப்போது இராணுவ ஆட்சி நீக்கப்படும் என்று அவர் திகதி குறிப்பிட்டுத் தெரிவிக்கவில்லை.

## லெபனன் யுத்தத்தை நிறுத்த சமாதான முயற்சி ஆரம்பம்!

(பெய்றூட்)

லெபனனில் பத்து வருடங்களாக நீடித்து வரும் உள்நாட்டு யுத்தத்தைச் சுமுகமாகத் தீர்த்து வைக்க முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

முஸ்லீம் தீவிரவாதக் குழுவினர் இதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

இக்கலவரங்களால்இதுவரை ஒரு லட்சம் பேர் வரை மடிந்துள்ளனர் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

தென்னபிரிக்காவில் குழறல்

## பழங்குடியினர் கலவரத்தில் 53 பேர் மடிவு; பலர் காயம்

(ஜொஹனஸ்பேக்)

தென்னபிரிக்காவில் டர்பனில் பழங்குடியினரிடையே உண்டான கலவரத்தில் ஐம்பத்து மூன்று பேர் மடிந்தனரென்றும் பலர் காயமுற்றனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலவரத்தில் ஈடுபட்டதாகவும் கலவரத்துக்கான காரணம் என்ன எனறு தெரியவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க, இன வெறி எதிர்ப்பு நடவடிக்கையில் நால்வர் இங்கு கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

பொலிஸார் சுட்டு ஒருவர் மடிந்தார், கும்பல் ஒன்று ஒருவரை உயிருடன் எரித்துக் கொன்றது. மற்றிருவர் வீட்டுடன் தீக்கிரையாகினர்.

பம்பாயில் காங். நூற்றுண்டு விழா

## மூத்த தலைவருக்கும் அழைப்பு வெளிநாட்டாரும் வருகை!

(பம்பாய்)

பம்பாயில் இன்று நடைபெறவுள்ள காங்கிரஸ் நூற்ருண்டுவிழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுமாறு காங்கிரஸின் மூத்த தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

திருவாளர்கள் நிஜலிங்கப்பா, சரண்சிங், மொரார்ஜி தேசாய், சி. சுப்பிரமணியம், ஜெகஜீவன் ராம் முதலானேரே பிரஸ்தாப தலைவர்களாவர்.

இவ்விழாவில் தற்போது பாகிஸ்தானில் உள்ள எல்லை காந்தி கபார்கானும் கலந்து கொள்கிறர்.

இதில் கலந்து கொள்ளவுள்ள முந்நூறு வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் பிரதமர் சிறப்பான வரவேற்புபசாரம் அளிக்கவுள்ளார்.

அரசின் புதிய கல்வித்திட்டம்:

## மறைமுக ஹிந்தித்திணிப்பு முயற்சி என குற்றச்சாட்டு

(சென்னை)

இணைப்பு மொழியாக ஹிந்திக்குப் பதில் ஆங்கிலத்தைச் செயற்படுத்துமாறு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணநிதியும் கலந்து கொண்ட ஹிந்தித் திணிப்பு எதிர்ப்பு தொடர்பான மாநாட்டில் மத்திய அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



இம் மாநாட்டுக்குத் திராவிடர் கழகம் ஏற்பாடு செய்திருந்தது.

புதிய கல்வித் திட்டம் மறைமுக ஹிந்தித் திணிப்பு நடவடிக்கையே என்றும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

கிராமங்களில் ஆங்கில போதனையின் அவசியம் பற்றியும் மாநாட்டில் வற்புறுத்தப்பட்டது

நைஜீரிய அதிபர் சென்ற விமானம்

## குண்டு வைத்துத் தகர்க்க சில இராணுவத்தினர் சதி?

(லண்டன்)

கடந்தவாரம் நைஜீரியாவில் இடம் பெறவிருந்த சதிமுயற்சி முறியடிக்கப்பட்டனதத் தொடர்ந்து, அதன் விபரங்கள் அம்பலத்துக்கு வந்துள்ளன.

நைஜீரிய ஜனதிபதி செல்லவிருந்த விமானத்தை குண்டு வைத்து தகர்க்க சில இராணுவ உயரதிகாரிகள் முயற்சித்தது விசாரணையில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதற்கு உடந்தையாக இருந்த சில விமானப்படை அதிகாரிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது இந்த விசாரணை நைஜீரிய உயர் ராணுவ நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

## பிரயாண ஒழுங்குகள்

சிங்கப்பூர், யோகூர் ஆகிய இடங்களில் வேலை வாய்ப்புகள் பெற்றுச் செல்லும் பயணிகள் கீழ்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். முன்பு இல. 15, டேவிற் றேட்டில் இயங்கிய எமது நிறுவனம் தற்போது புதிய முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது.

ALK

78 லீனஸ் பில்டிங்,
சென் பற்றிக்ஸ் றேட், யாழ்ப்பாணம்.

R/15225

டாக்டர்கள் உட்பட

## பங்களாதேஷில் பல்லாயிரம் அதிகாரிகள்வேலை நிறுத்தம்

(டாக்கா)

பங்களாதேஷில் நாற்பதாயிரம் டாக்டர்கள், பொறியியலாளர்கள், விஞ்ஞான ஆய்வாளர்கள் வேலைநிறுத்தம் மேற்கொண்டுள்ளனர்.

வேலைக்குத் திரும்புமாறு பொலிஸார் தம்மை மிரட்டி வருவதாக அவர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

## வயிற்றேட்டம் 272 பேர் இறந்தனர்

(டாக்கா)

பங்களாதேஷில் இருவாரங்களுக்குள் வயிற்ருேட்ட நோயால் 272 பேர் மடிந்துள்ளனர்.

3800க்கும் மேற்பட்டோர் இந்நோயால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் டாக்கா அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

## 60 நாடுகளுக்கு ஏற்றுமதி

(சென்னை)

பாரதத்தின் கைத்தறிப் பொருட்கள் அறுபது நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, சோவியத் யூனியன் முதலான நாடுகளும் இவற்றில் அடங்கும்.

## கடும் வரட்சி

(புதுடிலலி)

ராஜஸ்தானில் கடும் வரட்சி நிலவுவதாக அறிவிக்கப்படுகிறது. மொத்தம் 27 மாவட்டங்களில் வரட்சி நீடிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

## மொஸாட்....

...4ம் பக்கத் தொடர்

பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி தற்புகழ்ச்சி ததும்ப எடுத்தியம்பியவற்றைக் கேட்போம்; பயங்கரவாதத்திற்கும் தமிழ் கெரில்லாக்களுக்கும் எதிரான இலங்கையர் எல்லோரையும் பூரண ஆயுதபாணிகள் ஆக்குவது எமது அரசாங்கத்தின் திட்டம் அத்துடன், பரவலான, பின்னிப்பிணைந்த வேவு பார்க்கும் ஒழுங்கமைப்பு ஒன்றையும் வளாத்தெடுக்க அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது. இஸ்ரேலிய உள்ளூர்ப் பந்தோபஸ்துஏஜென்ஸியாகிய ''ஷின்பெத்'' தின் உதவியோடு இதனை நிறைவேற்றுவது எமது உத்தேசம் எமது மக்களின் அபிப்பிராயப்படிக்கு, அவர்களின் கீழ் பெற்றதுபோன்ற நல்ல பயிற்சியை என்றுமே நம்மக்கள் முன்னர் பெற்றது கிடையாது,'' இவ்வாறு லலித் அத்துலத் முதலி இஸ்ரேலிய 'ஷினபெத்' வேவுபார்க்கும் ஏஜென்ஸியைச் சிலாகிதுதுப் பேசினர்.

ஆனல், அந்த 'ஷின்பெத்' எப்படிப்பட்ட நிறுவனம்? அது கடைப்பிடிக்கும் உத்திகள் வழிமுறைகள் எப்பேர்ப்பட்டவை? இதோ இவ் வினக்களுக்கு விடைதரும் ஓர் அறிக்கை:

தடுப்புக் காவலில் உள்ளோரைத் தகாதவாறு நடத்துதல்; குற்றச்சாட்டோ நீதிமன்ற வழக்குவிசாரணையோ இன்றிக் குறுகிய காலம் ஆட்களைத் தடுப்புக்காவலில் இட்டு வைத்தல்; மனச்சாட்சிக்கு இணங்காத செயல்களில் ஈடுபட மறுத்தோரைச் சிறை வைத்தல்; ஆட்களின் செயல்களைப் பலப்பிரயோகத்தினல் மட்டுப்படுத்துவதற்கு நீதாசன முறையற்ற நிருவாக நடவடிக்கைளை மேற்கொள்ளல் பொது மக்கள் மத்தியிற் கலவரங்களின் போது பந்தோபஸ்துப் படையினராற் கொலைசெய்தல் முதலாம் இத்தகைய முறைகளை நெடுங்காலமாகப் பிரயோகித்து இஸ்ரேல் தனது ஆதிக்கம் ஆட்சி, ஆகியவற்றைப் பாலஸ்தீனத்துள் விசாலித்தற்காகப் பயன்படுத்தி வருகிறது.

இந்நடைமுறைகள் விரைந்து அதிகரித்து வருகின்றன. ('ஐ. டீ. எஃப்.' எனும்) இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகள் இத்துர்ச்செயல்களைச் செய்யத் துணை நிற்பது, பயங்கரவாதக் குழு எனத் தன்னைத்தானே பிரகடனப்படுத்தியுள்ள ('ரீ. என் ரீ.,') நிறுவனம். பயங்கரவாதத்திற்கு எதிரான பயங்கரவாதம் எனும் அர்த்தமுடைய அக்குழுவின் முழுப்பெயர், 'ரெறர் எகென்ஸ்ற் ரெறர்' என்பதாகும்.

வெஸ்ற் பாங்க் எனப்படும் மேற்குக் கரையோரப் பிராந்தியங்கள் குறித்து 'ஸயோனிசம்' தீட்டி வைத்துள்ள திட்டங்களுக்குத் தோதாக 'ரீ. என். ரீ.' வன்முறைத் தாக்குதல்கள் மேற்கொள்ளும் பாலஸ்தீனியரான ஆள் எவராவது ('பி. எல். ஓ.' அல்லது 'பலஸ்தீனியன் லிபெறேஷன் ஓர்கனைஸேஷன்' எனும்) பாலஸ்தீன விடுதலை இயகக அங்கத்துவம் வகிப்பவர் அல்லது அவ்வியக்க அனுதாபி எனத்தானும் சந்தேகிக்கப்பட்டாலே போதும், அவர் 'ரீ. என் ரீ.' யின் சித்திரவதை, வன்செயல், அநீதி ஆகியவற்றுக்கு அவர் உட்படவேண்டியதுதான்.

இங்கிலாந்தின் தலைநகராகிய லண்டனில் அமைந்து 'அம்னெஸ்ரி இன்ரர் நஷனல்' எனும் பெயர் கொண்ட சர்வதேச மன்னிப்புச் சபை, உலகின் எல்லாப் பாகங்களிலுமுள்ள பல்வேறு தேச மக்களினதும் மனித உரிமைகளுக்காகப் போராடி வருகிறது. அதன் அறிக்கைகளில் ஒன்று இஸ்ரேலிய 'ஷின் பெத்' உளவறியும் தாபனம் பற்றிக் கூறுவது வருமாறு:

'இஸ்ரேலியப் படைகள் தங்கியுளள பிராந்தியங்களில் பந்தோபஸ்துக் காரணங்களுக்காகப் பாலஸ்தீனியர்கள்கைது செய்யப்படுவதுஉண்டு. அதனை அடுத்து, பல்வேறு தடுப்புக் காவல் நடுவங்களில் வைத்து அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவர். விசாரணை செய்யும் இஸ்ரேலிய வேவு பார்த்தற்சேவையாகிய 'ஷின் பெத்' இப்பாலஸ்தீனியர்களை, பார்வை சாத்தியமற்றவாறு பொட்டாக்கு இட்டு, கைவிலங்கு மாட்டி, பலமணித்தியாலங்களாக அசையாது நிற்கும்படி பலவந்தப்படுத்தும். இச்சிட்சை நாட்கணக்காக நீடிக்கும். இவை மாத்திரமா? இல்லை, இன்னும் பலவுண்டு. பாலஸ்தீனியர்களின் ஆடைகளை முற்றுகக் களைந்து, அவர்கள் நிர்வாணமாக இருக்கையில் 'ஷின் பெத்' நெடு நேரத்திற்கு அவர்களைக் குளிர் நீராட்டும், அல்லது குளிரான காற்றேட்டத்தில் விட்டுவைக்கும். தடுப்புக் காவலில் உள்ளோருக்கு உணவு கொடுக்கப்படமாட்டாது; அவர்களை 'ஷின் பெத்' நித்திரை கொள்ள விடுவதில்லை; மலசலகூட, வைத்திய வசதிகளின்றி அவர்கள் இருத்தல் வேண்டும் அவர்களுக்கு எதிராக மட்டுமல்லாது, அவர்களுடைய குடும்பத்திலுள்ளபெண்களுக்கு எதிராகவும், வசவு வார்த்தைகள், நிந்தனைகள், பயமுறுத்தல்கள் முதலானவை பிரயோகிக்கப்படும்.'

ஈழமுரசு

## இலங்கையில் முதற் தடவையாக "அஸ்வமேத யாகம்" ஆரம்பம்

இலங்கையில் முதற் தடவையாக நடத்தப்பட்டு வரும் "அஸ்வமேத யாகம்" இன்று அதிகாலை முதல் பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது தொடர்ந்து நாற்பத்தெட்டுத் தினங்கள் நடைபெறவுள்ள இந்த வேள்வியில் இந்தியாவிலுள்ள பல சைவ, வைஷ்ணவ ஆசாரியார்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த வேள்விக்காக வெண் குதிரை ஒன்றும் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளது. அமைச்சர் இராசதுரை இதற்கான கால்கோள் வவபவத்தை நேற்று ஆரம்பித்து வைத்தார்.

பலர் தாக்கப்பட்டதாகவும் புகார்!

# வவுனியா இ.தொ.கா அலுவலக தஸ்தாவேஜுகளை ராணுவம் எடுத்தது; நெடுங்கேணி தலைவர் கைது

(வவுனியா)

**நெடுங்கேணி ஒலுமடு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கிளையின் தலைவர் திரு எஸ். சிவசுப்பிரமணியம் நேற்று முன்தினமிரவு இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வவுனியாவிலுள்ள இ.தொ.கா. அலுவலகத்தில் தங்கியிருந்த போதே இவர் கைது செய்யப்பட்டாராம்.**

நெடுங்கேணி – ஒலுமடு முகாம் அகதிகள் விடயமாக வவுனியா வந்திருந்த சுப்பிரமணியம் திரும்பிச் செல்ல பஸ் கிடைக்காதமையால் வவுனியா இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அலுவலகத்தில் தலைவர் வேம்படி இரணியப்பனுடன் தங்கியிருந்த வேளை ஆயுதப்படையினர் இரவு ரோந்து வரும்போது பாதுகாப்புச் சேவையிலிருந்த நான்குபேரை அழைத்துச் சென்று பொலிஸ் நிலயத்தில் வைத்திருந்ததாகவும், வேறுசில பாதுகாப்புச் சேவையில் ஈடுபட்டிருந்த ஊழியர்களைத் தம்முடன் கூட்டிச் சென்று காங்கிரஸ் அலுவலகத்தின் கதவைத் தட்டிக் கூப்பிடுவித்ததாகவும், கதவு திறக்கப்பட்டதும் உள்ளே சென்று அங்கு தங்கியிருந்த சுப்பிரமணியம் விசாரணைக் குட்படுத்தப்பட்டு சோதிக்கப்பட்டதாகவும், உடம்பில் உள்ள காயத்தழும்பு காரணமாக நையப்புடைக்கப்பட்டு கூட்டிச் செல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அவர்கள் செல்லும் போது அங்கிருந்த பல தஸ்தாவேஜுகளை எடுத்துச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமை அலுவலகத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. இக்காரியாலயத்தஸ்தாவேஜுகள் முன்பொரு முறையும் தீக்கிரையாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## விசர் நாய்க்கடி மருந்து கொண்டுவர உதவி தேவை

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் தினமும் முந்நூறு பேருக்கு விசர் நாய்க்கடி தடுப்பு ஊசி ஏற்றப்படுகிறது. இதனால் இந்த மருந்தை கொழும்பில் இருந்து இங்கு பெருமதொகையில் கொண்டு வர வேண்டியுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பிற்கும் இடையில் சேவையில் ஈடுபடும் தனியார் போக்குவரத்து உரிமையாளர்கள் இம் மருந்தை அங்கிருந்து இங்கு கொண்டுவருவதற்கு உதவுமாறும் இதனால் சமூகத்திற்கும், நோயாளிகளுக்கும் செய்யும் பேருதவியாக இது அமையுமெனவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

### ராஜீவ் காந்தியின்....

கொள்ளும்' என இந்தியப் பிரதமர் தெரிவித்த கருத்து தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1981 ஆம் ஆண்டுடன் காலாவதியான ஸ்ரீமாவோ-சாஸ்திரி உடன்பாட்டை நீடிக்கும் இலங்கை அரசின் திட்டத்தை இந்தியா நிராகரித்துள்ளது சரியானதெனவும் ஈரோஸ் தெரிவித்துள்ளது.

### ஜெயவர்த்தனவின்....

யின் முடிவை கூட்டணி வரவேற்றுள்ளது.

கூட்டணியின் அறிக்கையில் மேலும்கூறப்பட்டுள்ளதாவது: "இலங்கையின் தேசிய வருமானத்தில் அறுபது சதவீத அந்நிய செலாவணியைத் தேடித்தரும் ஆயிரக்கணக்கான தேயிலைத் தோட்டத் தமிழர்களை வமானம் மூலம் இந்தியாவுக்குத் திருப்பியனுப்ப ஜெயவர்த்தன திடீரென முடிவெடுத்துள்ளது கண்டிக்கத்தக்கது. இலங்கையில் உள்ள இந்தியத் தமிழர்களுக்குக் குடியுரிமை வழங்குவதை இலங்கை அரசு ஒத்திப்போட்டுள்ளதும கண்டனத்துக்குரியது.

பாரத வம்சாவழி உரிமைக்கு விருப்பம் தெரிவிக்காத இந்திய வம்சாவழி தமிழர்கள் அனைவருக்கும் குடியுரிமை வழங்குவதை காலவரையின்றி ஒத்திப் போடுவதே இலங்கை அரசின் முடிவின் நோக்கம் எனவு கூட்டணி தெரிவித்துள்ளது.

### வங்கி மறியல்...

போராட்டம் சில தினங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பேராசிரியர் கா. சிவத்தம்பி நகை விநியோகம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் இன்று இறுதி முடிவு எடுக்கவிருப்பதாலும், வடபகுதிப் பிராந்திய முகாமையாளர் திரு கணேசசுந்தரம் ஒரு சில தினங்களுக்குள் இது பற்றிய சாதகமானதொரு முடிவை தமக்கு தெரிவிப்பதாக எழுத்துமூலம் உறுதியளித்திருப்பதாலுமே இப்போராட்டம் ஒத்திவைக்கப்படுவதாக அடகுவைததோர் சங்கம் அறிவித்துள்ளது.

### பழிவாங்கும்....

பிரிவு மக்களுக்கும் சமமான வாய்ப்பை அளிக்கவேண்டும்.

இலங்கைத தமிழர் பிரச்சினை விரிவான கட்டத்தை அடைந்துவளது. ஆனுல் இலங்கைஅரசு இதனை தெளிவாகப் புரிந்து கொள்ளவில்லை. அரசியல் சட்டத்தில் அடிக்கடி சட்ட திருத்தங்களை கொண்டு வருவதன் மூலம் சுமுக தீர்வுக்கு தடங்கலாக இருக்கிறது.

பஞ்சாப் அஸாம், பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தது போலவே ராஜீவ் காந்தி இலங்கை விடயத்திலும் நவீன அணுகு முறைகளைக் கையாண்டுள்ளார்.

பிரச்சினை எமது இடத்திற்கும் பரவுவதைத் தடுக்க உறுதி செய்வதுடன் அண்டை நாட்டின் பிரச்சினைகளை தீர்த்துவைப்பதே இந்தியாவின் கடமையாகும் எனவும் அவர் கூறினர்.

## தமிழாசிரியர் சங்கத்தின் இரண்டு கருத்தரங்குகள்

சர்வதேச சுதந்திர ஆசிரியர் சங்க சம்மேளனம், ப்ரெடரிக் ஈபேர்ட் மன்றம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் இரு கருத்தரங்கு ஆரம்ப விழாக்கள் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் இன்று காலை பத்து மணிக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தலைமையில் நடைபெறும்.

"சமுதாயத்தில் ஆசிரியர் தொழிற் சங்கங்களின் தாக்கம்" தொடர்பாக நடைபெறும் கருத்தரங்கில் யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை முதன்மை விருந்தினராகவும் முன்னுள் இ. த. ஆ. சங்க பொதுச்செயலாளர் திரு. த. இ. குமாரசாமி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள்.

"ஆசிரிய தொழிற் சங்க செயற்பாடுகளில் பெண் ஆசிரியர்களின் பங்களிப்பு" என்ற தலைப்பில் நடைபெறும் கருத்தரங்கில் யாழ் உதவி தொழில் ஆணையாளர் திரு. என். சி. இராஜநாயகம் முதன்மை விருந்தினராகவும், கோப்பாய் ஆசிரியர் கல்லூரி அதிபர் செல்வி. ம. சின்னப்பு சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள்.

## ராணுவம் எடுத்த ஆலய குருக்களின் நகை கிராம சேவகர் ஊடாக ஒப்படைப்பு!

பொலிகண்டி நந்தவன ஆலயத்தில் அனுதரவாகக் காணப்பட்ட மேற்படி ஆலய குருக்கள் குடும்பத்தினரின் நகைகள், பணம், பாஸ் போர்ட் மற்றும் அடையாள அட்டைகள் போன்றவை மீண்டும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இப் பொருட்களை மீண்டும் உரியவர்களிடம் ஒப்படைப்பதற்கு ஒழுங்குகள் செய்த வல்வெட்டித்துறை தெற்குகிராம சேவையாளர் திரு. ஜெயவீரசிங்கத்தை யாழ். அரசாங்க அதிபரும், ஆலய குருக்களும் பாராட்டியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பொலிகண்டிப் பகுதியை இராணுவத்தினர் சுற்றி வளைத்து தேடுதல் நடத்திய போது கடமைக்குச் சென்று கொண்டிருந்த மேற்படி கிராம சேவையாளர் திரு. ஜெயவீரசிங்கத்தையும் தடுத்து நிறுத்தி விசாரித்தார்கள். அவர் அப்போது தனது உத்தியோகபூர்வ அடையாள அட்டையைக் காண்பித்து தன்னை உறுதிப்படுத்தினுர்.

பின்பு இராணுவ உயர்அதிகாரி பொலிகண்டி நந்தவன ஆலயத்திற்கு அவரை அழைத்துச் சென்று அங்கு அனுதரவாகக் காணப்பட்ட ஆலயக் குருக்களின் மேற்படி பொருட்களை அவரிடம் ஒப்படைத்தனர் கிராம சேவகர் இவ் விபரத்தை உடனடியாக பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபருக்கு அறிவித்து, யாழ். அரச அதிபரிடம் இப்பொருட்களை நேரில் ஒப்படைத்தார்.

அரச அதிபரின் பணிப்பின்படி பின்னர் மேற்படி ஆலயக் குருக்களை கிராமசேவகர் அழைத்து வந்து பொருட்களை ஒப்படைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்தார்.

### ஆசிரிய ...

குமென எதிர்பார்த்திருந்த வேளையில், திடீரென அதனை நான்கு மாதங்களுக்குப் பின் போட்டதானது அநீதியான செயல் என்று சங்கத்தலைவர் திரு. எச். என். பெர்னுண்டோ கல்வி அமைச்சருக்கு எழுதிய கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

தமக்கு இடமாற்றம் கிடைக்குமென்ற நம்பிக்கையில் தகுதி பெற்ற பல ஆசிரியர்கள் தாம் வசிததுவந்த வீடுகளையும் காலி செய்து விட்டனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ள அவர், ஜனவரியில் இடமாற்றங்கள் நடைபெற வேண்டுமென்றும் வற்புறுத்தியுள்ளார்.

### ஐந்து தமிழர்....

லொறி ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்த ஐந்து தமிழர்கள் அடையாளம் தெரியாத ஆயுதம் தாங்கிய சிலரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக ஏஜென்ஸிச் செய்தி ஒன்று கூறுவதாக நேற்றுப் பிற்பகல் சென்னை வட்டாரங்கள் தெரிவித்தன.

### லொறி எரிப்பில்....

தால் தாக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டதாகவும் ஹனிபா மருத்துவமனையில் தெரிவித்ததாகவும், அதன் பின்னரே அவர் காணுமல் போனதாகவும் தெரியவந்துள்ளது.

## பொங்கலன்று பரிசளிப்பு

ஸ்ரீ விசுவேசப் பிள்ளையார் கோயில் திருவெம்பாவை உற்சவ காலத்தையொட்டி வண்ணை ஐயனர் கோவிலடி சனசமூக நிலயத்தினரால் நடாததப் பெற்ற சமய அறிவுப் போட்டிக்குரிய விண்ணப்பங்கள் எதிர்பார்த்ததைவிட கூடுதலாக வந்தமையால், விடைத்தாள்களை திருத்துவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ள காரணத்தால் பரிசளிப்பு விழா தைப்பொங்கல் தினத்தனறு நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## தப்ப முயற்சியாட்; சுட்டுக்கொலை

அம்பாறையில் இராணுவ காவலிலிருந்த இரண்டு ஆளைஞர்கள் தப்பி ஓட முயன்ற போது காவலுக்கு நின்ற படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாகசாமி தேவநாயகம், கணபதிப்பிள்ளை தேவராஜா ஆகியோரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவர்களாகும். இவர்கள் இருவரும் ஈரோஸ் இயக்கத்தை சேர்ந்தவர்களென அரசாங்கம் அறிவித்துள்ளது.

## தூதுவர் அறிக்கை

(புதுடில்லி)

இலங்கையில் நடைபெறும் சம்பவங்களை சென்னையிலுள்ள இயக்கங்கள் திரித்துக் கூறிப் பிரச்சாரம் செய்வதாக இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதுவர் திரு. பெர்னுட் திலகரத்தின அறிவித்துள்ளார். இது சம்பந்தமான அறிக்கையொன்றையும் தூதுவர், பாரத வெளியுறவுச் செயலர் திரு. ரமேஷ் பண்டாரியிடம் நேற்றுக் கையளித்தார்.

## குண்டு வீச்சு 25 பேர் விசாரணை

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பேச்சாளரான டாக்டர் ஏ. எஸ். பாலசிங்கத்தின் வீட்டில் கடந்த திங்கட்கிழமை நிகழ்ந்த வெடி குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக குற்ற விசாரணைப் பிரிவினர் சுமார் இருபத்தைந்து பேரை விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 27-12-85 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23836